## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். CC. 173 /2018**

2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : உலகநாதன் | தொழில் | : தனியார் வேலை |
| பெயர் | : கிருஷ்ணமூர்த்தி | சமயம் | : |
| கிராமம் | : நெய்வாநத்தம். | சாதி | : |
| வட்டம் | : திருவண்ணாமலை | வயது | : 31 |

தேதி 12.07.2023

சாட்சியையும் எதிரியும் ந.பி.பெற்றாள் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. லியோடைமண்ட்ராஜ் P.C.- 2391 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர் .)**

**முதல் விசாரணை**

**1.** நான் நெய்வாநத்தம் கிராமத்தில் வசித்து வருகிறேன் . மின்சார துறையில் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகள் என் ஊரைச்சார்ந்தவர்கள்.

2. கடந்த 06.06.2016 ம் தேதியன்று காலை 6 டு 7 மணியளவில் எங்கள் ஊரான நெய்வாநத்தம் கிராமத்தில் உள்ள நிலத்தில் உள்ள எங்கள் இடத்தில் வீடு கட்டி கொண்டியிருந்தபோது வீடு கட்டுவதற்காண தண்ணீரை எடுக்க பைப் மூலமாக எடுத்துகொண்டிருந்தபோது பின் பக்கமாக வந்த ஆஜர் எதிரிகள் 5 நபர்களும், என் முகத்தில் துணியை போட்டு முடிக்கொண்டு தென்னை மட்டை, கம்பி, கட்டை ஆகியவற்றால் தலை, கை, முதுகு ஆகிய இடங்களில் அடித்தார்கள். தடுக்க வந்த எனது அம்மா இந்துமதியை தாக்கி காயப்படுத்தினார்கள். பிறகு ஆஜர் எதிரிகள் ஓடிவிட்டார்கள். காயம்பட்ட நானும், எனது அம்மாவும் செஞ்சி அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு எனக்கு தலையில் 14 தையல்கள் போட்டார்கள். மேல் சிகிச்சைக்காகவும், ஸ்கேன் எடுப்பதற்காகவும் பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமணைக்கு அனுப்பி வைத்தார்கள் . பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமணையில் ஸ்கேன் எடுத்து பிறகு மீண்டும் செஞ்சி அரசு மருத்துவமணைக்கு வந்து உள்நோயளியாக 10 நாள் சிகிச்சை பெற்றேன். போலிசார் விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை:**

**3.** 06.06.2016 ம் தேதி நாங்கள் எதிரிகளை தாக்கியதாக எங்களுக்கு எதிராக கொடுத்த புகாரின் பேரில் வழக்கு ஏற்பட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது தந்தை கிருஷ்ணமூர்த்தியை போலிசார் கைது செய்தார்கள் என்றால் சரிதான். 2 முதல் 4 எதிரிகளான கிருஷ்ணமூர்த்தி, பூபாலன், இராமச்சந்திரன் ஆகியோர்கள் பிழைப்பிற்காக வெளியூரில் வேலை பார்க்கிறார்கள் என்றால் சரிதான். 5.05.2016 ம் தேதி மாலை எங்களுக்கு சொந்தமமான மாடு எதிரியின் நிலத்தின் உள்ள பயிரை மேய்ந்ததால் அந்த மாட்டை எதிரிகள் பிடித்து கட்டி வைத்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.

4. எதிரிகுடும்பத்திற்கும், எங்களுக்கும் எதனால் பிரச்சனை வந்தது என்றால் நிலப்பிரச்சனை காரணமாக வந்தது. எங்கள் ஊரில் எதிரிகள் சமூகத்தை சார்ந்தவர்கள் எதிரி குடும்பம் தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சமூகத்தை சார்ந்தவர்கள் 20 குடும்பங்கள் உள்ளார்கள். எதிரிகள் வசிக்கும் தெருவில் எனது வீடு உள்ளதா என்றால் இல்லை.

5. சம்பவத்தில் காயம்பட்ட பின்னர் எங்கு சென்றேன் என்றால் மருத்துவமணைக்கு சென்றேன். காயம்பட்டு மருத்துவமணைக்கு சென்ற சமயத்தில் என் தந்தையை பார்த்தேனா என்றால் அவர் வீட்டில் இருந்தார். நான் மருத்துவமணைக்கு செல்வதற்கு முன்பாக காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. எனது அப்பா புதிதாக கட்டிய வீட்டிற்கும், வீடு கட்டிய போது குடியிருந்த பழைய விட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். காயம்பட்ட பின்னர் நான் வீட்டிற்கு சென்றேனா என்றால் காயம்பட்ட என்னை தூக்கி கொண்டு பைக்கில் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். என்னை தூக்கி சென்றவர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்றால் பார்த்து தடுத்தார்கள். மருத்துவரிடம் நடந்த சம்பவத்தை நான் சொன்னோ என்றால் சொன்னேன்.

6. மருத்துவரிடம் கம்பி, தென்னைமட்டை, கட்டையால் தாக்கியதாக சொன்னேனா என்றால் சொன்னேன். என் தந்தை செஞ்சி மருத்துவமணைக்கு எப்போது வந்தார் என்றால் காயம்பட்ட என்னை வீட்டிற்கு எடுத்துச்சென்று பிறகு செஞ்சி அரசு மருத்துவமணைக்கு வந்தபோது பின்னால் இருச்சக்கர வாகனத்தில் வந்து செஞ்சி மருத்துவமணையில் இருந்து ஜிப்மர் மருத்துவமணைக்கு போக சொன்னதால் காரில் என்னை அனுப்பி வைத்தார். ஜிப்மர் மருத்துவமணையில்

சிகிச்சை அளித்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்களா என்றால் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு அனுப்பி வைத்தார்கள். இந்த வழக்கில் என்னை கைது செய்துவிடுவார்கள் என்று பயந்து இருந்தேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். எப்போது என்றால் அடுத்த நாள் என்று நினைக்கிறேன். ஞாபகம் இல்லை. 06.06.2016 விசாரணை செய்தார்களா என்றால் ஞபாகம் இல்லை. எந்த போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் போலிஸ் உடையில் வந்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் தண்ணீர் பிடிக்க பைப் எடுத்துகொண்டு வெளியே வந்தபோது ஆஜர் எதிரிகள் பின்பக்கமாக வந்து என்னை தாக்கினார்கள் என்று சொன்னேனா என்றால் ஆமாம். எனக்கு எடுக்கப்பட்ட ஸ்கேன் „ எக்ஸ்ரே போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். தாக்க பயன்படுத்திய ஆயுதத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. வீடு கட்டிய இடத்திற்கு பக்கத்தில் வீடு உள்ளதா என்றால் சற்று தூரத்தில் நிலத்திற்கு வந்தால் தங்கும் வகையில் வீடு உள்ளது.

7. சம்பவத்தை பச்சைமுத்தும், சக்கரவர்த்தியும் தவிர வேறு யாரும் பார்க்கவில்லையா என்றால் அவர்களுடன் மற்றவர்களும் நிலத்தில் வேலை செய்தவர்கள் பார்த்தார்கள். போலிசார் விசாரணையில் மேற்படி விவரத்தை கேட்டார்களா என்றால் அடித்தது யார் என்ற விவரத்தை கேட்டார்கள். விரிவாக கேட்கவில்லை. நான் மருத்துவமனைக்-கு செல்வதற்கு முன்பாக ஆஜர் எதிரிகளும் மருத்துவமனைக்கு சென்று இருந்தார்கள் என்றால் இருந்தார்கள்.

8. நிலம் விற்பனை செய்தது, வாங்கியது போன்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிகளிடம் இருந்து நிலத்தை கிரையம் வாங்கிய போது அதற்காண மூலப்பத்திரத்தை கொடுத்தார்கள் என்றால் கொடுக்கவில்லை. மூலப்பத்திரங்களை வாங்கிகொண்டுதான் என் தந்தை பெயரில் கிரையப்பத்திரம் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தந்தை கிரையம் வாங்கிய 80 செனட் நிலம் போக எதிரிகளுக்கு சொந்தமான நிலத்தையும் சேர்த்து நாங்கள் அனுபவித்து வந்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் 80 செனட் கிரையம் கொடுத்த நிலையில் 68 செனட் நிலம்தான் பூமியில் இருந்தது. 4 முறை அளந்து பார்த்ததில் 68 செனட்தான் பூமியில் இருந்தது. எங்களை தாக்குவதற்கு எதிரிகளுக்கு சப்போர்ட்டாக ஆள் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் சமூகத்தை சார்ந்தவர்கள் அதிகம் பேர் ஊரில் உள்ளார்கள் என்றால் உள்ளார்கள். பட்டியல் சாட்சி பச்சைமுத்து,

சக்கரவர்த்தி எங்களுக்கு உறவினர்களா என்றால் இல்லை. ஊர்க்காரர்கள். அவர்கள் எங்கள் சமூகத்தை சார்ந்தவர்களா என்றால் இல்லை. பக்கத்து நிலத்துக்காரர்கள். என் முகத்தில் துணியை போட்டு எதிரிகள் தாக்கினார்கள் என்பதை போலிசாரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு ஏற்பட்ட காயமானது நானும், என் தந்தையும் எதிரிகளை தாக்கியபோது என் தந்தை தவறுதலாக என்னை தாக்கியதில் ஏற்பட்டது என்றால் தவறு. சம்பவத்தின்போது என் தந்தை அங்கு இல்லை என்று சாட்சி கூறுகிறார்.

9. எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமணைக்கு சென்ற பிறகு அரை மணி நேரம் கால தாமதமாக மருத்துவமணைக்கு சென்றோம் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்தால் போலிசாரிடம் என்னிடம் வாக்குமூலமாக பெற்று அதன் பேரில் வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றால் சம்பவம் உண்மை. செஞ்சி அரசு மருத்துவமணையில் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை என்றால் சரியல்ல. போலிசார் கைது செய்துவிடுவார்கள் என்று தலைமறைவாகியிருந்தேன் என்றால் இல்லை. எங்களை கைது செய்து விடுவார்கள் என்பதால் என் தந்தை எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.